<u>பத்திரிக்கைச் செய்தி</u>

## <u>நுகர்வோர் மின் இணைப்பிலிருந்து வணிக மின் இணைப்பாக மாற்றுவதற்காக புகார்தாரரிடம் ரூ.15,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வணிக ஆய்வாளர் கைது</u>

புகார்தாரர் திரு.வெங்கடேசன், கம்பரசம்பேட்டை கிராமம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் கட்டிட கட்டுமான தொழில் செய்து வருகிறார். புகார்தாரர் ஒப்பந்த அடிப்படையில் தான் கட்டிய வீட்டிற்கு நுகர்வோர் மின் இணைப்பு பெற்று கொடுத்துள்ளார். வீட்டின் உரிமையாளர் வீட்டினை வணிக ரீதியான பஎன்பாட்டிற்கு மாற்ற இருந்த காரணத்தினால் புகார்தாரரிடம் மின்இணைப்பினை நுகர்வோர் மின் இணைப்பிலிருந்து வணிக மின் இணைப்பாக மாற்றி தரும்படி கோரியுள்ளார். புகார்தாரர் மின் இணைப்பை மாற்ற திருச்சி மாவட்டம் தென்னூர் மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மாண அலுவலகத்தில் மனு சமர்ப்பித்துள்ளார். கடந்த மூன்று மாதங்களாக மனுமீது எவ்வித நடவடிக்கையும் இல்லாத காரணத்தினால் 17.04.2023ம் தேதி அன்று நேரடியாக அலுவலகத்திற்கு சென்று திரு.ராஜேஸ், உதவி பொறியாளர் அவர்களை சந்தித்து மனுவின் தற்போதைய நிலையை கேட்டுள்ளார். திரு.ராஜேஸ், உதவி பொறியாளர் அவர்கள் புகார்தாரரிடம் வணிக ரீதியிலான மின் இணைப்பு வழங்க வேண்டுமெனில் தனக்கு ரூ.20,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். பின் லஞ்ச தொகையினை குறைத்து ரூ.20,000/-லிருந்து ரூ.15,000/-ம் கொடுக்க வேண்டும் என கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் மேல் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்று 20.04. திரு.ராஜேஸ், உதவி பொறியாளர், லஞ்ச பணம் ரூ.15,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**TANGEDCO ASSISTANT ENGINEER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.15,000/- FOR CHANGING DOMESTIC EB CONNECTION TO COMMERCIAL.**

The complainant Tr.Venkatesan, is residing at Kambarasanpettai Village, Srirangam Taluk, Trichy District. The complainant is a building contractor. He had constructed one house and obtained domestic EB connection. The house owner wanted to change the EB connection from domestic to commercial connection for commercial purposes. In this regard the complainant had applied for commercial EB connection at the office of the TANGEDCO Thennoor, Trichy district. The petition status was pending for the past three months. On 17.04.2023, the complainant went to the Office of the Assistant Engineer, TANGEDCO, Thennoor and met Tr.Rajesh, Assistant Engineer and enquired about petition status. Tr.Rajesh, Assistant Engineer demanded Rs.20,000/- as bribe for processing the application. Later he reduced the bribe amount from Rs.20,000/- to Rs.15,000/- Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Trichy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 20.04.2023, during the trap proceedings, Tr.Rajesh, Assistant Engineer, TANGEDCO Thennoor reiterated his earlier demand and received the bribe amount of Rs.15,000/- from the complainant. The accused was arrested.